திருவிளக்கு வழிபாடு



கழக வெளியீடு

கவிஞர் சித.சிதம்பரத்தின்
தொலை நோக்குப் பார்வையில் ...
பாரோர் படித்துப் பயனுற



கழக வெளியீடு: ௯௭௮

ஓம்

திருவிளக்கு வழிபாடு



சித்தாந்த பண்டிதர், கழகப்புலவர்

திரு ப இராமநாதபிள்ளை அவர்கள்

எழுதியது

****

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.
திருநெல்வேலி-6. மதுரை-1. கோயமுத்தூர்-1.
1973

First Edition : Dec. 1958;
Reprints: May. 1954; Sep. 1954; Jan. 1955;
Nov 1965; Aug. 1970; Jan. 1973.

பதிப்புரை

"தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி."

முழுமுதல்வனை வழிபடுதற்கு நம் முன்னோர் சிறந்த திருவுருவமாகக் கொண்டது ஒளியினையே. பண்டுதொட்டு இன்றுகாறும் ஒளிவழிபாட்டினை முதன்மையான முறைமையில் கைக்கொண்டு தமிழகம் ஒழுகி வருகின்றது. திருவிளக்கே இருளகற்றிப் பொருள்விளக்கும் தன்மையது. அதனாலேயே பலர்க்கும் பயனும் திருக்கோவிலில் திருவிளக்கிடுவார் அடையும் பயன் மெய்யுணர்வென்பர். "விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" என அப்பரடிகளும் அருளியுள்ளார்.

திருவிளக்கு வழிபாடு, இல்லுறை மாதர் மக்களொடும் ஒக்கலொடும் கூடி நாடொறும் செய்யவேண்டிய சிறந்த வழிபாடாகும். அதனை நன்முறையில் செய்யும் வழி வகைகளை வகுத்துத் திருமுறைத் திருப்பாட்டுக்களுடன் விளக்குவது இந்நூல்.

இவ்வழிபாடு வீடுகள்தோறும் நாடொறும் செய்வது போல் திங்களுக்கு ஒருமுறையேனும் ஊரவரெல்லாரும் ஒருங்குசேர்ந்து ஒரு பொது இடத்தேனும், ஆல்போல் அகன்ற மரத்தடியிலேனும் கூடி வழிபடுதல் வேண்டும். உள்ளத்து ஒளியாய் நின்று ஒளிரும் சிவபெருமானின் திருவடையாளமே பேரொளிப் பிழம்பு; இவ்வுண்மையையுணர்த்துவதே இவ் ஒளிவழிபாடு என்று கொண்டு வழிபட்டு வருவாராயின் மழைவளமும் விளைவுச்செழிப்பும் இவற்றால், கல்வி, கைத்தொழில், ஆட்சிச் சிறப்பு முதலியனவும் ஓங்கி நாடு முன்னேறி நனிநாகரிக ஒற்றுமையும் பெருகும். இந்நூலினை வாங்கியும் வாங்குவித்தும் வழிபட்டு இன்புறுமாறு வேண்டுகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

அப்பர் அச்சகம், சென்னை-1. (III/2)

திருவிளக்கு வழிபாடு

இன்றியமையாமை

புறஇருள் போக்குவது ஒளி. அகஇருள் போக்குவது திருவடி உணர்வு. இல்லக இருள்போக்குவது திருவிளக்கு. வீட்டுக்கு மங்கலம் விளக்கே. வீட்டுளார்க்கு அணி விளக்கு வழிபாடே. விளக்கே பொருள்களை விளக்கும். விளக்கே அருளை நல்கும். அருள் நன்மைக்குக் காரணம். விளக்கு இல்லாவிட்டால் இருள். இருள் மருளை உண்டாக்கும். மருள் தீமைக்குக் காரணம். நன்மைக்குக் காரணமாகிய விளக்கை நாம் நாளும் வழிபடுவோமாக.

உடம்பெனும் மனைய கத்து
உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் அட்டி
உயிரெனும் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காண லாமே.

—அப்பர் ௪. எடு. ௪.

இடம் அமைத்தல்

மெழுகிக் கோலம் இட்டு மணைபோடுதல் வேண்டும். அதன்மேல் துடைத்துத் துப்புரவாக்கித் திருமுழுக் காட்டிய திருவிளக்கை வைத்தல் வேண்டும்.

இடம் அமைக்கும்பொழுது அகங்குழைந்து அன்புடன் ஓதவேண்டிய திருப்பாட்டு :

புகழ்ந்தகோ மயத்து நீரால் பூமியைப்
போலிய நீவித்
திகழ்ந்தவான் சுதையும் போக்கிச் சிறப்புடைத்
தீபம் ஏற்றி
நிகழ்ந்தஅக் கதலி நீண்ட குருத்தினை
விரித்து நீரால்
மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய் வலம்பெற
மன்னு வித்தார்.

—பெரியபுராணம், அப்பூதி – ௩௯.

புகழ்ந்த கோமயம் - தூய பசுவின் சாணம். பொலிய நீவி- அழகுபெற மெழுகி. வான்சுதையும் போக்கி - வெண்மையான மாக்கோலம் இட்டு.

திருமுழுக்கு ஆட்டல்

திருவிளக்கை உமியால் விளக்கித் துணியால் துடைத்தல் வேண்டும். தூய குளிர்ந்த நீரால், வரும் திருப்பாட்டை ஓதிக்கொண்டே திருமுழுக்குச் செய்தல் வேண்டும்.

வன்திறல் உந்தை யோடும் மாவேட்டை
யாடிப் பண்டிக்
குன்றிடை வந்தோ மாகக் குளிர்ந்தநீர்
இவரை ஆட்டி
ஒன்றிய இலைப்பூச் சூட்டி ஊட்டிமுன்பு
அறைந்தோர் பார்ப்பான்
அன்றிது செய்தான் இன்றும் அவன்செய்த
தாகும் என்றான்.

—பெரியபுராணம், கண்ணப் – ௧௦௬

பண்டு+இக்=பண்டிக்—முன்நாள் இந்த.

திருவெண்ணீறு இடல்

திருமுழுக்குச் செய்த திருவிளக்கினை வெண்மையான மெல்லிய துணியால் துடைத்து, "ஆருறு மெய் மணைமேல் அமர்ந்தருள்க போற்றி," என்று ஓதிக்கொண்டே மணைமேல் வைத்தல்வேண்டும். வரும் திருப்பாட்டை ஓதிக்கொண்டு திருவெண்ணீற்றைத் தூய நீரால் குழைத்து உச்சியில் ஒரு பொட்டும், அதன்கீழ் மூன்றும், அதன்கீழ் இரண்டும், அடியில் இரண்டுமாக எட்டிடங்களில் பொட்டிடுக. உச்சி நெற்றியாகவும், மூன்றும் முக்கண்களாகவும், இரண்டும் இரு கைகளாகவும், அடியில் இரண்டும் திருவடிகளாகவும் கருதுக. ஆருறு மெய்-முப்பத்தாறு தத்துவம்.

தாரார்கொன்றை பொன்தயங்கச் சாத்தியமார்பகலம்
நீரார்நீறு சாந்தம்வைத்த நின்மலன்மன்னும் இடம்
போரார்வேற்கண் மாதர்மைந்தர் புக்கிசைபாடலினால்
பாரார்கின்ற பட்டினத்துப் பல்லவனீச்சரமே.

—சம்பந்தர். க. சுஉ - ௪

நீரார் நீறு – தண்ணீர்விட்டுக் குழைத்த திருவெண்ணீறு.

பொட்டிடல்

சந்தனம், குங்குமம், சாந்து முதலியவற்றால் திருப்பொட்டிடுக. பாட்டு :

ஆளான அடியவர்கட்கு அன்பன் தன்னை
ஆன்அஞ்சும் ஆடியைநான் அபயம் புக்க
தாளானைத் தன்ஒப்பார் இல்லாதானைச்
சந்தனமும் குங்குமமும் சாந்தும் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்தொப் பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரையில் ஆர்த்த
கீளானைக் கீழ்வேளூர் ஆளும் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே.

—அப்பர். ௬. சுஎ - க.

கலவஞ்சேர் கழிக்கானல் கதிர்முத்தம் கலந்தேங்கும்
அலவஞ்சேர் அணைவாரிக் கொணர்ந்தெறியும் அகன்துறைவாய்
நிலவஞ்சேர் நுண்ணிடைய நேரிழையாள் அவளோடும்
திலகஞ்சேர் நெற்றியினார் திருவேட்டக் குடியாரே.

—சம்பந்தர். க. சுசு. – ச.

திலகம் - பொட்டு.

நெய் வார்த்தல்

தூய எண்ணெயை, ''மடம்படும் உணர்நெய்யாம் மன்னே போற்றி'' என ஓதிக்கொண்டு வார்க்க.

திரியிடுதல்

தூய பஞ்சுத்திரி அல்லது நூல் திரியை ''உயிரெனும் திரிமயக்க உதவுவோய் போற்றி'' என ஓதிக்கொண்டு வைக்க.

ஏற்றல்

தீக்குச்சியினால் ''ஞானத்தீயால் எரிகொள இசைவாய் போற்றி'' என ஓதிக்கொண்டு திருவிளக்கு ஏற்றுக.

பூச்சூட்டல்

தூய மலர்களாலாகிய சரம், மாலை, கண்ணி முதலியவற்றை வரும் திருப்பாட்டை ஓதிச் சூட்டுக.

தேனுடை மலர்கள் கொண்டு திருந்தடி பொருந்தச் சாத்தி
ஆனிடை அஞ்சும் கொண்டு அன்பினால் அமரஆட்டி
வானிடை மதியம் சூடும் வலம்புரத் தடிகள் தம்மை
நானடைந் தேத்தப் பெற்று நல்வினைப் பயனுற் றேனே.

—அப்பர். ச. ௫௫ – க.

எழுந்தருளப்பண்ணல்

அம்மை அப்பராக விளங்கும் முழுமுதல்வன் பேரொளிப் பிழம்பாய் உள்ளவன். காணவும் கருதவும்

கைகூப்பித் தொழவும் இத்திருவிளக்கின்கண் எழுந் தருள வேண்டுவோமாக. வரும் திருப்பாட்டை ஓதிக் கொண்டு எழுந்தருளிய அடையாளமாக ஒரு பூ உச்சி யிலும் ஒரு பூ திருவடியிலும் சாத்துக.

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

—அப்பர். ௪. ௧௧ - அ.

படைப்புப் படைத்தல்

சிறப்பு நாட்களில் தேங்காய் பழம் பொங்கல் சுண்டல் அவல் கடலை முதலியன கொள்க. நாடொறும் நெற்பொரியே நல்லது. அல்லது முந்திரிகைப் பழம் வெல்லம் முதலியவும் கொள்ளலாம். படைப்பு - நைவேத்தியம்.

படைப்புப் படைக்குங்கால் ஓதவேண்டிய திருப்பாட்டு :

மின்னு செஞ்சடை வேதியர்க் காமென்று
செந்நெல் இன்னமு தோடுசெங் கீரையும்
மன்னு பைந்துணர் மாவடு வுங்கொணர்ந்து
அன்ன என்றும் அமுதுசெய் விப்பரால்.

—பெரியபுராணம், அரிவாள் - ௬.

நீரால் படைப்பினை மும்முறை வலமாகச் சுற்றி வளாவுக.

மலர்தூவிப் போற்றல்

நறுமலரேனும், வில்வம் துளசி முதலிய தளிரேனும் தூயவாகக் கொணர்ந்து போற்றித்தொடர் ஓதி ஒவ் வொரு போற்றிக்கும் ஒவ்வொரு மலராக அருச்சிக்க.

எல்லாம் சிவன்என்ன நின்றாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாள் படையாய் போற்றி
கொல்லுங் கூற்றொன்றை உதைத்தாய் போற்றி

கல்லாதார் காட்சிக்கு அரியாய் போற்றி
கற்றார் இடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி
வீரட்டம் காதல் விமலா போற்றி.

—அப்பர். ௬. ௫ - ௧

இதன்கண் எட்டுப் போற்றி காணப்படுகின்றன. இவை கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறுமை, அருள், அறிவு, மெய், தவம், அன்பு என்னும் எண்குண உருவகமாக எட்டுமலர் தூவிப் போற்றற்கு இயைந்தன.

திருச்சிற்றம்பலம்

விளக்கிட்டார்க்கு மெய்ந்நெறி விளக்குவாய் போற்றி
தூண்டு சுடரனைய சோதீ போற்றி
சோதியே போற்றி சுடரே போற்றி
ஓதும் உள்ஒளி விளக்கே போற்றி
இருள்கெடுக்கும் இல்லக விளக்கே போற்றி
சொல்லக விளக்காம் சோதீ போற்றி
பலர்காண் பல்லக விளக்கே போற்றி
நல்லக நமசிவய விளக்கே போற்றி
உலப்பிலா ஒளிவளர் விளக்கே போற்றி
உணர்வுசூழ் கடந்ததோர் விளக்கே போற்றி
உடம்பெனும் மனையக விளக்கே போற்றி
உள்ளத் தகளி விளக்கே போற்றி
மடம்படும் உணர்நெய் விளக்கே போற்றி
உயிரெனும் திரிமயக்கு விளக்கே போற்றி
இடம்படும் ஞானத்தீ விளக்கே போற்றி
நோக்குவார்க்கு எரிகோள் விளக்கே போற்றி
ஆதியாய் நடுவுமாகும் விளக்கே போற்றி
அளவிலா அளவுமாகும் விளக்கே போற்றி
சோதியாய் உணர்வுமாகும் விளக்கே போற்றி

தோன்றிய பொருளுமாம் விளக்கே போற்றி
பேதியா ஏகமாகும் விளக்கே போற்றி
பெண்ணுமாய் ஆணுமாகும் விளக்கே போற்றி
போதியா நிற்கும் விளக்கே போற்றி
தில்லைப் பொதுநட விளக்கே போற்றி
கற்பனை கடந்த சோதீ போற்றி
கருணையே உருவாம் விளக்கே போற்றி
அற்புதக் கோல விளக்கே போற்றி
அருமறைச் சிரத்து விளக்கே போற்றி
சிற்பர வியோம விளக்கே போற்றி
திருச்சிற்றம் பலத்து விளக்கே போற்றி
பொற்புடன் நடஞ்செய் விளக்கே போற்றி
பூங்கழல் விளக்கே போற்றி போற்றி
போற்றிஎன் பார்அமரர் விளக்கே போற்றி
போற்றிஎன் பார்அசுரர் விளக்கே போற்றி
போற்றிஎன் பார்மனிதர் விளக்கே போற்றி
போற்றிஎன் அன்புபொலி விளக்கே போற்றி

திருச்சிற்றம்பலம்

குறிப்பு: *இம்முப்பத்தாறு போற்றித் தொடரினையும் மும்முறை ஓதி மலர் தூவ நூற்றெட்டு அருச்சனை ஆகும்.*

மணி அடித்தல்

குழல், யாழ், தோல்கருவி, தாளக்கருவி, குரல் என ஐவகை இசை ஓசையும் வழிபாட்டிற்கு இன்றியமையாதன. இவை அனைத்தும் ஓசைமெய்யைக் குறிக்கும் குறிப்பாகும். ஓசைமெய் முப்பத்தாருவதாகிய நாத தத்துவம். ஆதலால், வழிபாட்டில் இன்னோசை வேண்டும். அதன் அறிகுறியே மணி ஓசையாகும். இதுவே செவிச்சுவையுணவாகும். இவ்வுணவே உயிர் உணவாகும். வரும் திருப்பாட்டை ஓதிக்கொண்டு மணி அடிக்க. குழல் - புல்லாங்குழல், நாகசுரம் முதலியன. யாழ் - வீணை பிடில் முதலியன. தோல்

கருவி - மத்தளம் தவல் முதலியன. தாளக்கருவி - சாலர். குரல் - வாய்ப்பாட்டு.

பணியுடை மாலும் மலரிேனும்
பன்றியும் வென்றிப் பறவையாயும்
நணுகல் அரியகள் ளாறுடைய
நம்பெரு மானிது என்கொல்சொல்லாய்
மணியொலி சங்கொலி யோடுமற்றை
மாமுர சின்னொலி என்றும்ஓவாது
அணிகிளர் வேந்தர் புகுதுங்கூடல்
ஆலவா யின்கண் அமர்ந்தஆறே.

—சம்பந்தர். க. எ - க.

நறும்புகையும் உறும்ஒளியும் காட்டல்

சாம்பிராணிப் புகையும், கைவிளக்கு ஒளியும் வருந் திருப்பாட்டை ஓதிக்கொண்டே தனித்தனியாக் காட்டி வழிபடுக. கைவிளக்கு - தீபக்கால்.

பிறப்போடு இறப்பென்றும் இல்லா தான்காண்
பெண்ணுருவோடு ஆணுருவும் ஆயினான்காண்
மறப்படுமென் சிந்தைமருள் நீக்கி னான்காண்
வானவரும் அறியாத நெறிதந் தான்காண்
நறப்படுபூ மலர்தூபம் தீபம் நல்ல
நறுஞ்சாந்தம் கொண்டேத்தி நாளும் வானோர்
சிறப்போடு பூசிக்கும் திருவா ரூரில்
திருமூலட் டானத்தெம் செல்வன் தானே.

—அப்பர். சு. கூ0 - ௫.

தூபம் - நறும்புகை. தீபம்—உறும் ஒளி. சூடன் - கருப்பூரம்.

புகழ்தல்

திருமுறை முதலிய அருள் நூல்களிலுள்ள திருப் பாடல்களைப் பொருள் விளங்க இனிய இசையுடன் பாடுதல். புகழ்தல் - தோத்தரித்தல்.

திருச்சிற்றம்பலம்

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க்கு ஆற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.

—அப்பர் சு. உகூ - க,

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருஐயாறு அகலாத செம்பொற் சோதீ.

—அப்பர் சு. கூஅ - எ.

ஞானச் சுடர்விளக்கு - கண்காணும் உலகப் பொருளையும், நூலையும் அறியத் துணை செய்யும் ஒளிவிளக்கு. ஞானம் அறிவு. சுடர் - ஒளி.

சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே
சுரிகுழல் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் நீற்றாய்
பங்கயத் தயனும்மா லறியா

நீதியே செல்வத் திருப்பெருந் துறையில்
 நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே அடியேன் ஆதரித் தழைத்தால்
 அதெந்துவே என்றரு ளாயே.

—திருவாசகம், அருள் - க.

சோதி – பேரொளிப்பிழம்பு ; இறை. சுடர் – ஞாயிறு, திங்கள். சூழ் ஒளிவிளக்கு - திருவிளக்கு.

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
 உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
 சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
 அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
 தொண்டனேன் விளம்புமா விளம்பே.

—திருவிசைப்பா, க. கோயில் – க.

விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே.

—திருமந்திரம், கஅகஅ.

மாலை விளக்கும் மதியமும் ஞாயிறுஞ்
சாலை விளக்குந் தனிச்சுடர் அண்ணலுள்
ஞானம் விளக்கிய நாதன்என் உள்புகுந்து
ஊனை விளக்கி யுடனிருந் தானே.

— திருமந்திரம், கடுஉக.

மானும் மழுவும் திருமிடற்றில் வாழுமிருள்
தானும் பிறையுமே தாங்கிநிற்கும்—வானவர்க்கு
வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்தென்
உள்ளத்தே நின்ற ஒளி. கக. பட்டினத்தார், ரு.

மறவாமை யானமைத்த மனக்கோவில் உள்ளிருத்தி
உறவாதி தனைஉணரும் ஒளிவிளக்குச் சுடர்ஏற்றி
இறவாத ஆனந்தம் எனுந்திருமஞ் சனம்ஆட்டி
அறவாணர்க்கு அன்பென்னும் அமுதமைத்தர்ச் சனைசெய்வார்.

—பெரியபுராணம், வாயிலார் – அ.

ஒளிவிளக்கு - திருவிளக்கு.

தங்கள்பிரான் திருவுள்ளஞ் செய்துதலைத் திருவிளக்குப்
பொங்கியஅன் புடனெரித்த பொருவில்திருத் தொண்டருக்கு
மங்கலமாம் பெருங்கருணை வைத்தருளச் சிவலோகத்து
எங்கள்பிரான் கணம்புல்லர் இனிதிறைஞ்சி அமர்ந்திருந்தார்.

—பெரியபுராணம், கணம்புல்லர் – அ.

ஆங்கா ரமும்அடங் கார்ஒடுங் கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்பும் அறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகன் உருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென்செய் வார்யம தூதருக்கே.

—கந்தரலங்காரம், ௰௫.

அருள்ஒளி விளங்கிட ஆணவம் எனுமோர்
இருளற என்னுளத் தேற்றிய விளக்கே
துன்புறு தத்துவத் துரிசெலா நீக்கிநல்
இன்புற என்னுளத் தேற்றிய விளக்கே
மயலற அழியா வாழ்வுமேன் மேலும்
இயலுற என்னுளத் தேற்றிய விளக்கே.

திருஅருட்பா, கருக0.

திருச்சிற்றம்பலம்

வேண்டுகோள்

குடும்பத்தார்

பேரொளிப் பிழம்பாகிய பெரும்பொருளே! உன் திருவடியை மனமார நினைந்து, வாயார வாழ்த்திக் கையாரத் தொழுது, தலையார வணங்குகின்றோம். எங்கள் பணிவும் அன்பும் நிறைந்த வழிபாட்டை ஏற்றருளிப் போற்றுவாயாக. போற்றி போற்றி.

யாங்களும், எங்கள் பெற்றோர்களும், உடன்பிறந்தார்களும், எங்கள் அருமை மக்களும் திருவருட்டுணையால் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும், தூய ஒழுக்கமும், நின்னைமறவா இன்பமும் நீங்காமற் பெற்று வாழ அருள்புரிந்து போற்றுவாயாக. போற்றி போற்றி.

எங்கள் தொழின்முறைகள் அறமுறை தவிராது பொன்னும் பொருளும் புகழும் நண்பும் பெருகச் செழித்தோங்கி நன்முறையாக வாழத் திருவருள் புரிந்து போற்றுவாயாக. போற்றி போற்றி.

எங்கள் மக்கட்குக் கல்வியும், தேர்ச்சியும், நல்லொழுக்கமும், நல்லிணக்கமும் நாளும் பெருகிச் சிறந்தோங்க அருள்புரிந்து போற்றுவாயாக. போற்றி போற்றி.

எங்கள் மக்கள் பட்டமும், அழகும், அறிவும், ஆற்றலும், அரும்பொருள் கைகூடும் பணியும், பெரும் புகழும், பெருநண்பும் பெற்று வாழ அருள் புரிந்து போற்றுவாயாக. போற்றி போற்றி.

அவர்கள் தக்கபருவத்து ஒக்கலும் நட்பும் உறவும் ஊரும் விரும்பும் திருமணம் கைகூடி ஒருமனமாய்க் கற்பொடும் கட்டுரை கடவாது காதல்வாழ்வு வாழவும் அருள்புரிந்து போற்றுவாயாக. போற்றி போற்றி.

எங்கள் குடும்பம் முழுவதும் விருந்தும், ஈகையும், இன்சொல்லும், இறைவழிபாடும், திருந்திய ஒழுக்கமும், முறைதவறாமையும் உடையவராய் வாழத் திருவருள் புரிந்து போற்றுவாயாக. போற்றி போற்றி.

நாடு மொழி நன்னெறி பீடுறவாழவும், எல்லாரும் நண்பராய் ஒற்றுமையாய் வாழ்ந்து வெற்றியுறவும் திருவருள் புரிந்து போற்றுவாயாக. போற்றி போற்றி.

உலகம் மழையும் விளைவும் பெருகிப் பசியும் பிணியும் அகன்று சான்றோர் விழையும் நல்வாழ்வும், நெடுவாழ் நாளும் பெரும்பொருளும் பெற்றுவாழ அருள்புரிந்து போற்றுவாயாக. போற்றி போற்றி.

நாங்கள் அறியாமற் செய்யும் பிழைகளை மன்னித்துத் தீவழிச் செல்லாமல் தடுத்து நல்வழிச் செலுத்தி நல்லாரென வாழ அருள்புரிந்து போற்றுவாயாக.

போற்றி போற்றி.

ஒவ்வொரு நாளும் எங்களுக்குரிய ஊணையும் உழைப்பையும் அருளி, உம்மை நினைந்து செம்மை புரிந்து உரமும் உணர்வும் உவகையும் பெற்றுவாழ அருள்புரிந்து போற்றுவாயாக. போற்றி போற்றி.

பிள்ளைகள்

ஒளிவளர் விளக்கே! எளியேங்கள் கல்வியும், கற்றோர் துணையும், நல்லொழுக்கமும் பெற்றுவாழ அருள் புரிந்து போற்றுவாயாக. போற்றி போற்றி.

கடவுள் தொழுகையும், சான்றோர் ஆசான் தந்தை தாய் முன்னோர் முதலியோர் வணக்கமும், நண்பர் இணக்கமும், உடலுரமும், நல்லுளமும், இன்மொழியும், கடமை யாற்றலும் வாய்மையும், தூய்மையும், நாடு மொழி நன்னெறிப் பற்றும், திருநீறு முதலிய தெய்வ நினைப்பூட்டும் செம்மைத் திரு அடையாளங்களைக் கைக்கொள்ளும் மேன்மையும் தந்தருளிப் போற்றுவாயாக.

போற்றி போற்றி.

பழி பாவத்திற்கு அஞ்சலும், தீய காட்சிகளைக் காண நாணலும், ''அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல்'' விலக்கலும், மறந்தும் பிறன் கேடு சூழாமையும் தந்தருளிப் போற்றுவாயாக. போற்றி போற்றி.

உடை உணவு உடல் உளம் எல்லாம் தூய்மையாய்ப் படைபயில் திறலொடு, அளவறிந்துண்பதால் நோய்க் கிடங் கொடாது, உளமகிழ் நண்பால் இன்புற்று, "அன்பு அறிவு தேற்றம் அவாவின்மை" யோடு ஆக்கம் பெற்று வாழ வழித்துணையாய் உடன் நின்று திருவருள் புரிந்து போற்றுவாயாக. போற்றி போற்றி.

இளமை தொட்டே எங்கட்கு நன்றியும், வணக்கமும், உதவியும் கூட்டுறவும் தெய்வ நாட்டமும், சிற்றுயிர்க்கு இரக்கமும் சேர்ந்துவாழ் தேட்டமும் அமையத் திருவருள் புரிந்து போற்றுவாயாக. போற்றி போற்றி.

கொலையும் புலையும் வஞ்சகமும் பொய்யும் நெஞ்சத்துத் தோன்றவும் இடமின்றி, காணவும் கேட்கவும் நாணெய்தித் திருக்குறள் திருமுறை முதலிய அருள் நூல் வழி ஒழுகி, நிறைமொழி மாந்தர் மறைமொழி உடையராய் மெய்யுணர்வினராய் மகிழ்வொடும் வாழத் திருவருள் புரிந்து போற்றுவாயாக. போற்றி போற்றி.

சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே! உன் திருமுன்னும், கல்லூரியிலும், படிப்பகத்தும், நாளும் ஓதியே உய்ய அருள்புரிந்து போற்றுவாயாக. போற்றி போற்றி.

அந்தணர் வாழ்க; ஆனினம் வாழ்க; வானவர் வாழ்க; வான்மழை வாழ்க; மாநிலத் தலைவன் வாழ்க; தமிழ்மொழி வாழ்க; தாயகம் வாழ்க; நன்னெறி வாழ்க; நாதன் தாள் வாழ்க; திருநீறு வாழ்க; சிவபிரான் வாழ்க; எல்லா உயிருலகும் இனிதுற வாழ்க; குலம் வாழ்க; குரவர் வாழ்க; கூட்டு வழிபாடு வாழ்க; கோன்முறை வாழ்க.

இவ்வேண்டுகோளை அன்போடு ஒருவர் ஓதிப் 'போற்றி' என்றவுடன், ஏனையார் "போற்றி போற்றி" எனவும், 'வாழ்க' என்றவுடன், "வாழ்க வாழ்க" எனவும் சேர்ந்து ஓதுதல் வேண்டும்.

———

கழக வெளியீடு : ௯௭௮

பதிப்பாளர் :

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட்.,

தலைமை நிலையம் :

1/140, பிரகாசம் சாலை, சென்னை-1.

கிளை நிலையங்கள் :

திருநெல்வேலி-6. மதுரை-1.
கோயமுத்தூர்-1. கும்பகோணம்.
திருச்சி-2.

ரூ. 0-40

மேலுறை திருவரங்கனார் அச்சகத்தில் அச்சிடப்பெற்றது.